# இலங்கையில் தேர்தல் சீர்திருத்தங்கள்: கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமைகள்(Mixed-Member Proportional Systems-MMP)

**உள்ளடக்கம்**

நிறைவேற்றுச் சுருக்கம்………………………………………………………… 3

பின்னணி: ஜனாதிபதியின் வாக்குறுதிகள்………………………………………… 5

இலங்கையின் தற்போதைய தேர்தல் முறைகள்………………………………… 5

எம்.எம்.பி முறை எவ்வாறு ஜனாதிபதி சிறிசேனாவின் தேர்தல் வாக்குறுதிகளை
(அல்லது தேர்தல் சீர்திருத்தக் குறிக்கோள்களை) நிறைவேற்றுகின்றது… 6

எம் எம் பி எவ்வாறு செயற்படுகிறது……………… 7

எம் எம் பி இன் அம்சங்கள்

இரண்டு அடுக்கு முறையில் இரட்டை வாக்கு…………………………… 7

விகிதாசார ஆசனங்கள் மற்றும் மாவட்ட ஆசனங்களுக்கிடையிலான விகிதம் 8

மூடப்பட்ட பட்டியல் முறையும் திறந்த பட்டியல் முறையும்…………………… 9

கட்சிப் பட்டியல் விகிதாசார பிரதிநிதித்துவ முறை……… 10

தேர்தல் வரம்பெல்லை………………………………………………… 10

ஏன் 20வது திருத்தத்தினால் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது………… 11

ஒரு வாக்கு போதுமானதல்ல………………………………………………………… 11

ஆசன விகிதாசாரங்கள் மாவட்ட விகிதாசாரத்திற்காக திரிக்கப்படுகின்றன……………… 12

மூடப்பட்ட பட்டியல்……………………………………………………………………. 13

போனஸ் ஆசனங்கள்……………………………………………………………… 14

எம் எம் பி முறை பற்றிய கரிசனைகள்……………………… 14

தொங்கு நிலை ஆசனங்கள் ……………………………………………………… 14

பெண்கள் பிரதிநிதித்துவம்………………………………… 15

உசாத்துணைகள்…………………………………………………………… 17

**நிறைவேற்றுச் சுருக்கம்**

ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் அவர் 2015 ஜனவரி, 08ஆம் திகதி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கான அடிப்படையாக அமைந்தது. அவர் அளித்த பல வாக்குறுதிகளுள் இலங்கையின் தேர்தல் முறையை சீர்திருத்துவதற்கான ஒரு நீண்ட கால கோரிக்கைக்கான பதிற் செயற்பாடும் அடங்கியிருந்தது.

கட்டாயம் செய்யபப்படவேண்டிய இரண்டு விடயங்களை இனங்கண்டிருந்த இலங்கையின் தேர்தல் முறை தொடர்பான விவாதத்தின் அடிப்படையிலான ஒரு தேர்தல் முறையைநோக்கி நகர்வதை அத்தேர்தல் விஞ்ஞாபனம் விளக்கியது: அவை **இலங்கையின் முன்னைய பாராளுமன்ற தேர்தல் முறையில் காணப்பட்டது போன்ற ஒரு சிறிய தனி உறுப்பினர்** (மற்றும் பல உறுப்பினர்)**தேர்தல் மாவட்டங்களை மீள அறிமுகப்படுத்துதல் மற்றும் தற்போதைய தேர்தல் முறையினால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார தேர்தல் முறையை (விபி) தொடர்ந்தும் தக்கவைத்தல்** என்பனவாகும். மாவட்ட மட்ட வாக்களிப்பு முறைமையானது, எளிய பெரும்பான்மை தேர்தல் முறை (FPTP) என்று பொதுவாகக் குறிப்பிடப்படும் ஒரு பன்மைத்துவ தேர்தல் முறைமைக்கு மாறும்.

அதிக வாக்குகளினால் ஒரு தனி வெற்றியாளர் தெரிவுசெய்யப்படும் ஒரு பெரும்பான்மை அடிப்படையில் தனி உறுப்பினர் தேர்தல் மாவட்டங்கள் தெரிவு செய்யப்படுவதால், அதேநேரத்தில் இங்கு விகிதாசார பிரதிநிதித்துவத்தை அடைவதற்கு தேர்தல் முறைமைகள் தொடர்பான சித்தாந்தத்தில் கலப்பு உறுப்பினர் விகிதாசார தேர்தல் முறைமை (MMP) என்று அறியப்படும் முறைமையைப் பயன்படுத்தவேண்டும். அதாவது, விகிதாசார பெறுபேறுகளை எய்துகின்ற அதேவேளை, பெரும்பான்மை வாக்குகள் அடிப்படையிலான தெரிவின் அம்சங்களோடு கலந்தமையும் ஒரு முறைமை. விகிதாசார பெறுபேறு என்பது, பாராளுமன்றத்தில் கட்சிகளின் இறுதி ஆசன எண்ணிக்கையானது, அவை பெற்ற மொத்த வாக்குகளின் பங்கிற்கு அமைவானதாக இருப்பதாகும்.

தேர்தல் முறைமை சீர்திருத்தத்தில் ஈடுபடும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய எம்.எம்.பி தேர்தல் முறையின் முக்கிய அம்சங்கள் குறித்து இந்த கட்டுரை ஆராய்கின்றது. இலங்கையின் அரசியல் விவாதங்களில் காணப்படும் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான தர்க்கங்களை ஆராய்வது இந்த கட்டுரையின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டதொன்றாகும்.

2015 யூன், 20ம் திகதி வெளியிடப்பட்ட அரசியலமைப்பிற்கான உத்தேச 20 வது திருத்தமே புதிய தேர்தல் முறைமையொன்றை அறிமுகஞ்செய்வதற்கான அரசாங்கத்தின் முதல் முயற்சியாக காணப்படுகின்றது. எனினும், முன்வைக்கப்பட்டுள்ள முறையையானது, எம்.எம்.பி தேர்தல் முறைமை வடிவமைப்புக் கோட்பாடுகளை பின்பற்றவில்லை. இரண்டு வாக்கு சீட்டு முறையொன்றை உள்ளடக்கத் தவறியுள்ளமையும், மாவட்ட (பெரும்பான்மை அடிப்படையிலான) ஆசனங்களுடன் ஒப்பிடும்போது போதியளவு விகிதாசார ஆசனங்கள் இல்லாமையும் விகிதாசார பிரதிநிதித்துவத்தை தக்கவைப்பதற்கான அதன் நோக்கத்தில் அரசியலமைப்பிற்கான 20 வது

திருத்தம் தோல்வியடைந்துவிடும் என்று பொருள்படுகிறது. மேலும், முழுமையான விகிதாசார பெறுபேறுகளிலிருந்து சிறிது விலகிச் செல்லும் தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் ஓர் அம்சத்தையும் அது தக்கவைத்துக்கொண்டுள்ளது. ஒரு தேர்தல் மாவட்டத்தில் அதிகளவு வாக்குகளை பெற்ற கட்சிகளுக்கு போனஸ் ஆசனங்கள் வழங்குவதே அந்த அம்சமாகும்.

சிறிய தேர்தல் தொகுதிகளை அறிமுகப்படுத்துகின்றபோது, விகிதாசார பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக எவ்வாறு எம்.எம்.பி முறைமை கட்டமைக்கப்படவேண்டும் என்பது தொடர்பான முக்கிய விடயங்களை இந்த ஆவணம் ஆராய்கின்றது. எம்.எம்.பி முறையின் முக்கிய அம்சங்களையும் அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுவதற்கு சர்வதேச அளவில் காணப்படும் தேர்தல் முறைமைகள் தொடர்பான பெருமளவு ஆராய்ச்சி அமைப்புகளின் கண்டறிதல்களோடு அது இணைந்துசெல்கிறது. இலங்கைக்கு எத்தனை மாவட்ட ஆசனங்கள் பொருத்தமானதாக அமையும் என்பது குறித்தோ அல்லது எல்லை நிர்ணய நடைமுறைகுறித்தோ இந்த ஆவணம் ஆராயவில்லை.

தொடர்ந்து வரும் பகுதிகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு, எம்.எம்.பி முறையின் முக்கிய அம்சங்கள் பரீட்சிக்கப்பட்டு சர்வதேச உதாரணங்களின் மூலம் பயன்மிக்கவையென நிரூபிக்கப்பட்டுள்ளன: உதாரணம்- ஜேர்மனி, நியுசிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, பொலிவியா மற்றும் லெசோதோ. எம்.எம்.பி முறையின் கோட்பாடுகள் பயன்மிக்கமுறையில் அடையப்பெறுவதற்கு, பீ.ஆர் - எவ்.பி.டி.பி ஆகிய இரண்டிற்கும் 1:1 என்ற விகிதத்தில்(அல்லது அதற்கு மிகக் கிட்டிய, ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் மாற்று அளவில்) இரண்டு வாக்குச் சீட்டுக்களை அல்லது ஓர் இரட்டை வாக்குச் சீட்டைப் பயன்படுத்தும் முறையொன்றை பின்பற்றுவது அவசியமாகலாம். இரண்டு வாக்குச் சீட்டுக்களை அல்லது ஓர் இரட்டை வாக்குச் சீட்டைப் பயன்படுத்துவதே எம்.எம்.பி முறையின் மிக முக்கியமான அம்சமாகும் என்பதோடு, விகிதாசார தேர்தல் பெறுபேறுகள் அடையப்பெறுவதற்கும் அவசியமானதாகும். இரட்டை வாக்குச்சீட்டு வாக்காளர்கள் தங்கள் பகுதியின் தேர்தல் பெறுபேற்றிற்கும் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் ஒட்டுமொத்த ஆக்கஅமைவைத் தீர்மானிக்கும் தேசிய(அல்லது உபதேசிய) அளவிலான விகிதாசார தேர்தல் பெறுபேற்றிற்குமான தமது விருப்பத் தெரிவுகளுக்கு நேரடியாக தமது வாக்குகளை அளிப்பதற்கு அவர்களுக்கு இடமளிக்கிறது. ஒரு கட்சியை தாம் ஆதரிக்கின்றபோதும், தோற்றுப்போகும் அக்கட்சி வேட்பாளருக்கு வாக்களித்து தங்கள் வாக்கை வீணடிப்பதை விட, வெற்றிபெறக்கூடியவருக்கு வாக்களிப்பதென உள்ளூர் மட்டத்தில் முடிவுவெடுக்கும் வாக்காளர்களின் “தந்திரோபாய வாக்களிப்பின்” தாக்கத்தை இது குறைக்கின்றது.

வாக்காளர்களுக்கு இருவேறு விருப்பத்தெரிவுகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் தந்திரோபாய வாக்களிப்பின் தாக்கம் உள்ளூர் மட்டத்திலான பெரும்பான்மை வாக்களிப்பிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுகிறது. அத்துடன் தேசிய அளவில் பாராளுமன்றததின் ஒட்டுமொத்தஆக்கஅமைவில் அது தாக்கம் செலுத்தாது. மேலும் சிறிய கட்சிகள் மக்கள் மத்தியில் தாம் கொண்டிருக்கின்ற ஆதரவிற்குச் சமமான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெறுவதற்குள்ள தடைகளையும் இது குறைக்கின்றது. இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், ஈடுசெய்யும் ஆசனங்களாக விளங்குவதற்கு போதிய பீ.ஆர் ஆசனங்களைக் கொண்டிருத்தலானது (மாவட்டங்களில் மக்கள் ஆதரைக் கொண்டிருப்பவர்களும் எனினும் பெரும்பானமை வாக்குகளை வென்றெடுக்குமளவுக்கு போதுமான ஆதரவு இல்லாதிருப்பர்களுமானவர்களுக்கு), பாராளுமன்றத்தின் இறுதி ஆக்கஅமைவில் பெருமளவுக்கு முழுமையான விகிதாசாரப்பெறுபோறுகளை வழங்கக்கூடும்.

மேலும், அரசியல் கட்சிகள் ஆசனங்களைப் பெறுவதற்கு ஒட்டுமொத்த வாக்குகளில் விதித்துரைக்கப்பட்ட ஒரு வீதத்திலான வாக்குகளைப் பெறவேண்டுமென நிபந்தனை விதிக்கும் ஒரு தேர்தல் வரம்பினை தற்போதைய பல எம்.எம்.பிக்கள் பயன்படுத்துகின்றன. உயர்வான ஆசன நிர்ணய எல்லை சிறிய கட்சிகளை ஒதுக்கிவிடக்கூடும். இதன் காரணமாக பல எம்.எம்.பி நாடுகள் இவ்வாறான ஆசன நிர்ணய எல்லையை கொண்டிருப்பதில்லை அல்லது ஒரு குறைந்த எல்லையைக் (உ.ம். தேசிய ரீதியாக 5மூ வீதத்திற்குக் குறைவான) கொண்டிருக்கின்றன. மேலும் சிறியளவு மாவட்ட ஆசனங்களை வென்ற ஆனால் தேசிய வாக்கு வீத வரம்பெல்லையை எட்டத் தவறும் கட்சிகளுக்கு விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்களை ஒதுக்குகின்றன.

ஆசனங்களை ஒதுக்குவதற்கான கணிப்பீட்டிற்காக இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படுவதும் ஜேர்மனி மற்றும் நியுசிலாந்து போன்ற எம்.எம்.பி முறையை பயன்படுத்தும் நாடுகளில் பின்பற்றப்படுவதுமான ஹரெ கோட்டா அல்லது செயின்டே லேகெ முறையை தொடர்ந்தும் பேணலாம். மிகவும் துல்லியமான விகிதாசார பெறுபேறுகளை உறுதிசெய்தற்கு இவ்விரு கணிப்பீட்டு முறைகளும் சில நாடுகளில் பயன்படுத்தப்படும் டி ஹொன்ட் முறையை விடவும் மிகவும் பொருத்தமானவையாகும்.

மேலும் அனைத்து எம்.எம்.பி நாடுகளும் தங்கள் விகிதாசார பிரதிநிதித்துவ வாக்கிற்காக மூடப்பட்ட கட்சிப் பட்டியலையே பயன்படுத்துகின்றன. “மூடப்பட்ட பட்டியல்” என்ற அதன் பெயர் உணர்த்துவதுபோன்று, அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டிய இப்பட்டியலானது, தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தபின்னர் அதில் மாற்றங்கள் செய்வதற்கான அரசியல் கட்சியின் தற்றுணிபை நீக்கிவிடுகிறது. இந்த பட்டியலை சமர்ப்பித்த பின்னர் அதில் உள்ள தனிநபர்களின் பெயர்களையோ அல்லது ஒழுங்குவரிசையோ மாற்ற முடியாது. மூடப்பட்ட பட்டியல் என்பது பெண்கள், சிறுபான்மை குழுக்கள் மற்றும் விரும்பினால் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர்கள் ஆகியோருக்கு அதிகளவு பிரதநிதித்துவத்தை வழங்குவதற்கான கட்சி ஒதுக்கீடுகளுக்கு பயன்படுத்தப்படக்கூடியது. இவ்வாறான அம்சங்களைக் கொண்டிருக்ககூடிய மூடப்பட்ட பட்டியலானது, அரசியல் கட்சிகளினால் துஸ்பிரயோகம் செய்யப்படும் சாத்தியத்தை இல்லாதொழித்து வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு தெளிவாக விதித்துரைக்கப்பட்ட ஒரு நடைமுறையில் அல்லது சூத்திரத்தில் (உ.ம். ஒரு சிப்பர் கோட்டா)தங்கியிருக்கலாம். தமது பிஆர் பட்டியலில் விதித்துரைக்கப்பட்ட இடைவெளிகளில் (உ.ம். ஒவ்வொரு மூன்றாவது பெயரும் என்ற அடிப்படையில்) அல்லது ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் மூலம் பெண்களை உள்ளடக்க கட்சிகளை நிபந்தனைப்படுத்தும் சட்டமாக்கப்பட்ட கட்சி பட்டியல் கோட்டாக்கள் மூலம் பெண்களின் அதிகளவு பிரதிநிதித்துவத்தை அடையமுடியும். இலங்கையின் தேர்தல் முறையில் நாம் கண்டுள்ள தூண்டிலிட்ட இறையாகப் பயன்படுத்தப்பட்டு பின்னர் தூக்கி எறியப்படும் முறைக்கு ஆளாகாமல் அரசியல் கட்சிகள் களமிறக்கும் உறுப்பினர்களின் தரத்திற்கு மக்கள் வாக்களிப்பதற்கான வாய்ப்பை ஒரு மூடிய நிரல் வழங்குகிறது. “தூண்டிலில்லிட்ட இறை” முறையில் பிரசித்தமான அபேட்சகர்கள் நிரலில் உள்ளடக்கப்பட்டு பின்னர் தேர்தல் முடிவுற்றதும் தூக்கியெறியப்படுவார்கள்.

இலங்கையின் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பில் வெளியிடப்படும் ஒரு கரிசனை தொங்கு நிலை ஆசனங்கள் தொடர்பானதாகும். ஆசனங்களை தெரிவு செய்வதன் பன்முகதன்மை பல சந்தர்ப்பங்களில் எம்.எம்.பி முறைமைகளுக்குள் ஈடுசெய்யும் ஆசனங்கள் புகுத்தப்படவேண்டிய நிலையை உருவாக்கி சமநிலையற்ற முடிவுகளிற்கு இட்டுச்செல்கிறது. சிலவேளைகளில் ஈடு செய்வதற்கு பிஆர் ஆசனங்கள் கிடைக்காதவகையில் தேர்தல் முடிவுகள் கூட மாற்றப்படலாம். இது தொங்கு நிலை ஆசனங்கள் இருக்கும் முறைமையில் காணப்படும் ஒரு நிலைமையாகும். பன்முக வாக்களிப்பு காரணமாக, சட்டவாக்கச் சபைக்கு ஒதுக்கப்பட்ட பிஆர் ஆசனங்களினால்

சரிபடுத்த முடியாதளவிற்கு கட்சியொன்றிற்கு கிடைக்கவேண்டிய ஆசனங்களை விட அதிகமான ஆசனங்கள் கிடைக்கும்போது தொங்கு நிலை ஆசனங்கள் உருவாகின்றன. சர்வதேச உதாரணங்கள் தொங்கு நிலை ஆசனங்களை உள்வாங்குவதற்கான பல்வேறு வழிமுறைகளை கையாளுகின்றன. மேலதிக ஆசனங்களை வழங்குவதற்கோ (சிறிது சமனற்ற தன்மையை உருவாக்கி), விகிதாசாரத்தினை தக்கவைத்துக் கொள்வதற்காக ஏனைய கட்சிகளுக்கு மேலதிக ஆசனங்களை வழங்குவதற்கோ, முழு ஆட்சி மன்றத்தினதும் அளவை காப்பாற்றுவதற்காக ஆசனங்களின் எண்ணிக்கையை குறைக்கவோ அல்லது ஆசனங்களை வழங்காது விடவோ எம்.எம்.பி முறைமை தீர்மானிக்கலாம்.

**பின்னணி- ஜனாதிபதியின் வாக்குறுதி**

2015, ஜனவரியில், ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழித்தல் மற்றும் தேர்தல் முறைமையைச் சீர்திருத்துதல் ஆகியன உள்ளிட்ட இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பில் பல மாற்றங்களைக் கோரும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பில், இத்தேர்தல் விஞ்ஞாபனம் பின்வருமாறு தெரிவிக்கின்றது:

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஒழிப்பிற்கு நான் உத்தரவாதமளிப்பதோடு, ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் தனக்கென பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கொண்டிருப்பதை உறுதிசெய்வேன். புதிய தேர்தல் முறை தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறை மற்றும் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர்களின் விகிதாசார முறை ஆகியவற்றை கொண்டிருக்கும்.[1]"

புதிய முறைமை பாராளுமன்றத்தின் ஆக்க அமைவை மாற்றாத ஒன்றாக விளங்குமாகையால், தேர்தல் முறைமைக்கான எந்த மாற்றமும் அனைத்து கட்சிகளினதும் ஆதரவுடனேயே நிறைவேற்றப்படும் எனவும் அந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வாக்குறுதியளித்தது. ஆகவே இந்த வாக்குறுதிகள், 1).தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையில் காணப்பட்டதை போன்று ஒரு சிறிய தனி உறுப்பினர் மற்றும் பல உறுப்பினர்கள் தேர்தல் தொகுதிகளை மீள அறிமுகஞ் செய்தல், [2]2) ஒரு கட்சிக்குள்ளேயிருந்து வேட்பாளர்களை தெரிவுசெய்யும் இலங்கையின் தற்போதைய முறையாகிய விருப்பு வாக்குமுறையை நீக்குதல், 3).விகிதாசார பிரதிநிதித்துவ முறையை தக்கவைத்தல் மற்றும் தொகுதி மட்ட வாக்களிப்பில் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர்களின் பட்டியலில் இருந்து விகிதாசார பிரதிநிதித்துவ வேட்பாளர்களை தெரிவுசெய்தல் ஆகியவற்றை வேண்டிநிற்கின்றன.

**இலங்கையின் தற்போதைய தேர்தல் முறை**

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு அமுலிலிருக்கும்வரை இலங்கை தொகுதிவாரி பிரதிநிதித்துவ தேர்தல் முறையை பயன்படுத்தியது. இந்த முறையின் கீழ் வேட்பாளர் ஒருவர் தொகுதியொன்றில் அதிக வாக்குகளை பெற்றால் வெற்றிப் பெற்றவராவார். ஒரு சிறு எண்ணிக்கையிலான பல

---

[1] புதிய ஜனநாயக மக்கள் முன்னணி, மைத்திரி ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை. priu.gov.lk. http://www.priu.gov.lk/presidential_manifestos/Manifesto-EN.pdf இருந்து, 15 மார்ச் 2016 அன்று பெறப்பட்டது.

[2] ஒரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேர்தல் களத்தில் நேரடியாக அலகு குறிக்கிறது தேர்தல் அமைப்புக்கள் விவாதங்களில் நிலையான கனடியர்கள் வைத்து இந்த சூழலில் பயன்படுத்தப்படுகிறது. கால தொகுதியில் கூட இந்த நிகழ்வில் விவரித்தார் என ஒற்றை உறுப்பினர் தேர்தல் மாவட்டங்களில் விவாதித்து பயன்படுத்தப்படுகிறது.

உறுப்பினர் தொகுதிகளைத் தவிர, பெரும்பாலான தேர்தல் தொகுதிகள் ஒரு பாராளுமன்ற உறுப்பினரையே கொண்டிருந்தன.

கடந்த காலங்களில் இலங்கையின் தொகுதிவாரி தேர்தல் முறை, அதாவது எளிய பெரும்பான்மை முறை (FPTP) பெரும் சமமற்ற பெறுபேறுகளுக்கு இட்டுச் சென்றிருந்தது. 1970ம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் இதற்கு சிறந்த உதாரணம் ஆகும். இந்த தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 36.9 வீத வாக்குகளையே பெற்ற போதிலும் 60வீத ஆசனங்களை பெற்றது. அதேவேளை 37.9 வீத வாக்குகளை பெற்ற ஐக்கிய தேசிய கட்சிக்கு 12வீத ஆசனங்களே கிடைத்தன.

1978 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கை பல கட்சிகள் மத்தியிலிருந்து விகிதசார அடிப்படையில் உறுப்பினர்களை தெரிவுசெய்யும் பாரிய தேர்தல் மாவட்டங்களைக் கொண்ட விகிதசாரப் பிரதிநிதித்துவ முறையொன்றைப் பின்பற்றியது. தற்போது 22 தேர்தல் மாவட்டங்கள் பெருமளவிற்கு “மாவட்டங்கள்”[3] என்று அழைக்கப்படும் இலங்கையின் நிர்வாக அலகுகளை ஒத்திருக்கின்றன. அதனடிப்படையில் இலங்கை தற்போது தனது 225 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு தனியொரு வாக்குச் சீட்டைப் பயன்படுத்துகின்றது: 22 பல உறுப்பினர் தொகுதிகளுக்கு 196 ஆசனங்களும், 29 தேசிய பட்டியல் ஆசனங்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு வாக்காளரும் தனது தேர்தல் மாவட்டத்தில் தான் தெரிவு செய்யும் கட்சிக்குள்ளிலிருந்து மூன்று உறுப்பினர்களை தெரிவுசெய்யலாம். சர்வதேச ரீதியில் “திறந்த பட்டியல்” என அழைக்கப்படும் இம்முறைமை இலங்கையில் ‘விருப்பு வாக்கு முறை’ என அழைக்கப்படுகின்றது. பாரிய தேர்தல் தொகுதிகள் பாரளுமன்ற உறுப்பினர்களை மக்கள் குறைந்தளவே நாடக்கூடியவர்களாகவும் உள்ளூர் பிரச்சினைகளில் குநற்தளவே கரிசனை கொண்டவர்களாகவும் ஆக்குகின்றன என்ற பொது மக்கள் கருத்தின் காரணமாக அந்த முறைமை ஓரளவிற்கு மக்கள் மதிப்பிழந்ததாக மாறியுள்ளது. தேர்தல் வன்முறைகள் மற்றும் நிதியளிப்பு குறித்த ஏனைய விடயங்களும் (பெரும்பாலும் பிழையாக) இதனுடன் தொடர்புபடுத்தப்பட்டு தற்போதைய தேர்தல் முறையின் தீமைகளாகப் பார்க்கப்படுகின்றன.

**கலப்பு உறுப்பினர் விகிதாசார முறை எவ்வாறு ஜனாதிபதி சிறிசேனாவின் தேர்தல விஞ்ஞாபன குறிக்கோள்களை நிறைவேற்றுகின்றது**

இந்த ஆய்வு தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான சிறிசேனவின் தேர்தல் பிரசார வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான விதப்புரைகளை முன்வைக்கின்றது. தேர்தல் விஞ்ஞாபனம் இரண்டு உலகளாவிய மாறிகளைக் கொண்டிருக்கும் கலப்பு முறையினை நோக்கி நகர்வதென வாக்குறுதியளிக்கிறது. அவை கலப்பு உறுப்பினர் பெரும்பான்மை முறை மற்றும் கலப்பு உறுப்பினர் விகிதாசார முறை என்பனவாகும். இவ்விரண்டு முறைகளுள் எம்எம்பி முறைமை மாத்திரமே **விகிதாசார பிரதிநிதித்துவ முறையை தக்கவைத்தல் மற்றும் சிறிய தனி உறுப்பினர் தேர்தல் மாவட்டங்களை மீள அறிமுகப்படுத்தல்** என்ற இரண்டு பிரதான எடுகோள்களுக்கு போதுமானளவு அமைவதாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறித்துரைக்கப்பட்ட இரண்டாம்நிலை வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, எம்எம்பி முறைமை அல்லது வேறு ஏதேனும் விகிதாசார முறைமையில்

---

[3] இந்த எண்ணிக்கை, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை இணைத்து ‘யாழ்ப்பாண தேர்தல் தொகுதியாகவும்’, மன்னார், வவுனியா மற்றும முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களை ஒன்றிணைத்து ‘வன்னி தேர்தல் தொகுதியாகவும்’ மாற்றப்பட்டுள்ளமையால் இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்கள் எனும் எண்ணிக்கையிலிருந்து வேறுபடுகின்றது.

பிஆர் பட்டியலானது, தோல்வியடைந்த வேட்பாளர்களை “மூடப்பட்ட பட்டியல்” (கீழ்வரும் விளக்கத்தை பார்க்க) ஒன்றிற்குள் ஒரு திட்டமிட்ட முறையில் உள்ளடக்கும்வண்ணம் உருவாக்கப்படலாம்.

ஆகவே எம்.எம்.பி முறையால் ஜனாதிபதியின் வாக்குறுதியின் முக்கிய அம்சங்கள் அனைத்தையும் பூர்த்திசெய்ய முடியும். இந்த ஆய்வு தேர்தல் முறையை மாற்றும் ஜனாதிபதி சிறிசேனவின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான அடிப்படையாக எம்.எம்.பி முறையில் காணப்படும் முக்கிய அம்சங்கள் குறித்து ஆராய்வதோடு மட்டுப்படுத்தப்படும் என்பதோடு, தேர்தல் முறை மாற்றம் தொடர்பான வாதப்பிரதிவாதங்களையோ அல்லது அரசாங்கத்தின் வேறு மட்டங்களிலான தேர்தல்முறைகள் பற்றியோ ஆராயாது. மேலும், தேர்தல் சீர்திருத்தத்தோடு தொடர்புபட்டவையும் தேர்தல் முறைமைகள் தொடர்பான விவாதங்களில் அடிக்கடி பேசப்படுபவையுமான பிரசார நிதியளிப்புச் சட்டங்கள் மற்றும் தேர்தல் வன்முறைகள் ஆகியன குறித்தும் இந்த ஆய்வு ஆராய முயலாது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாக்களிப்புப் பெறுபேறுகளில் விகிதாசாரத்தன்மையை தக்கவைத்துக்கொள்ளும் அதேவேளை, தொகுதிவாரி தேர்தல் முறைமைக்கு (FPTP) அமைவான சிறிய தேர்தல் மாவட்டங்களின் உத்தேச மீள் அறிமுகப்படுத்தலானது, கலப்பு முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான தேவையை ஏற்படுத்துகிறது. விகிதாசார தேர்தல் பெறுபேறுகளுக்குப் போதுமானளவு வகைசெய்வதற்காக வடிவமைக்கப்படக்கூடிய, சர்வதேசரீதியில் பிரயோகிக்கப்படும் ஒரே முறைமை கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமையேயாகும். கடந்த இரண்டு தசாப்தங்களில் பல நாடுகள் இந்த கலப்பு உறுப்பினர் விகிதாசார தேர்தல் முறைக்கு - பன்முக வாக்களிப்பு மூலமான தேர்தல் மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய கலப்பு முறைக்கு மாறியுள்ளன. இவையிரண்டும் ஜனாதிபதியின் வாக்குறுதிகளாகும். இலங்கையின் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான தற்போதைய விவாதங்களும் எம்.எம்.பி முறைக்குச் சார்பானதாகவே உள்ளன.

**கலப்பு உறுப்பினர் விகிதாசாரமுறை எவ்வாறு செயற்படும்?**
**கலப்பு உறுப்பினர் விகிதாசாரமுறையின் அம்சங்கள்**

- இரண்டு வகையான ஆசனங்கள் - மாவட்ட ஆசனங்கள் மற்றும் விகிதசார ஆசனங்கள்.
- இரண்டு வாக்குகள்- ஒன்று உள்ளூர் வேட்பாளருக்கானது மற்றையது தேசிய/ உப தேசிய கட்சி மட்டத்திலான பிரதிநிதித்துவத்திற்கானது.
- மாவட்ட ஆசனங்கள் பெரும்பான்மை மூலமாகவோ அல்லது பன்மைதன்மை (எளிய பெரும்பான்மை தேர்தல் முறைமை) மூலமாகவோ வெல்லப்படுகின்றன.
- மாவாட்ட ஆசனங்களை ஒதுக்குவதற்காக உருவாக்கப்பட்ட பன்முக வாக்களிப்பு காரணமாக ஏற்படும் சமமற்ற தன்மையை ஈடுசெய்வதற்ககாக விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன.
- விகிதாசார பிரதிநிதித்துவக் கட்சி பட்டியல் மூடப்பட்டது. தேர்தலுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் ஒரு நிலையான ஒழுங்கும் பெயர்களும் கொண்ட கட்சிப் பட்டியலினால் இந்த மூடப்பட்ட பட்டியல் தீர்மானிக்கப்படுகிறது அல்லது மாவட்ட மட்ட வாக்களிப்பில் தோல்வியடைந்த மிகவும் வெற்றிகரமான வேட்பாளரை உள்ளடக்குவதற்கான ஒரு சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்.
- இதனடிப்படையில் இது இரண்டு அடுக்குகளை கொண்ட பிரதிநிதித்துவத்தை கொண்டிருக்கும்: மாவட்ட பிரதிநிதித்துவம் மற்றும் தேசிய / உபதேசிய மட்ட விகிதாசார பிரதிநிதித்துவம்.[4]

[4] எம்எம்பியின் நன்மைகள் மற்றும் தீமைகள்.(2016).ஏசிஇ செயற்றிட்டம்:தேர்தல் தொகுதிகளுக்கான கட்டமைப்பு அறிவு.14மார்ச்2016பெறப்பட்டது,http://aceproject.org/ace-en/topics/es/esd/esd03/esd03a/esd03a01 இலிருந்து

**இரண்டு அடுக்கு முறையில் இரட்டை வாக்கு**

ஒரு புதிய தேர்தல் முறைக்கான மிக அண்மைக்கால யோசனைகள் ஓரளவிற்கு எம்.எம்.பி முறையை அடிப்படையாக கொண்டவையே ஆகும். முன்னைய பாராளுமன்றத்தின் காலத்தில் முன்வைக்கப்பட்ட 20வது திருத்தத்திற்கான நகல்வடிவு, தனியொரு வாக்கினை பயன்படுத்த கோருகிறது.[5] இந்த வாக்கு அரசியல் கட்சிகளினால் அல்லது சுயேட்சைக் குழுக்களினால் நிறுத்தப்படும் உள்ளூர் மாவட்ட மட்ட வேட்பாளர்களுள் ஒருவருக்குச் சார்பாக அளிக்கப்படும். அதன் பின்னர், உள்ளூர் மட்ட வாக்களிப்பின் மொத்த முடிவும் ் தேசிய மற்றும் உப தேசிய மட்ட கட்சி விகிதாசார பிரதிநிதித்துவ ஆசன ஒதுக்கங்களைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.[6]

இது எம்.எம்.பி முறைக்குரிய அம்சமாகும். எம்.எம்.பி நாடுகள் வழமையாக இருவாக்கு முறையை பயன்படுத்துகின்றன. இரண்டு முக்கியமான காரணங்களுக்காக இந்த இரு வாக்குகள் எம்.எம்.பி முறையின் முக்கியமான அம்சமாக அமைகின்றன: முதலாவதாக, இரட்டை வாக்கு வாக்காளர்கள் தங்கள் தெரிவுகளை வெளிப்படுத்துவதில் அவர்களுக்கு மேம்பட்ட வாய்ப்பை வழங்கின்றது. தனியொரு வாக்கு உள்ளூர் மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் ஒரே விருப்பத்தெரிவை வெளிப்படுத்த வாக்காளர்களை மட்டுப்படுத்தும் அதேவேளை, இரு வாக்குகள் அவர்கள் தங்கள் தெரிவினை இரண்டாக்குவதற்கு வழிசெய்கின்றது. நியுசிலாந்தில், எம்.எம்.பி இரட்டை வாக்கு முறைக்கு மாறிய பின்னர் வந்த முதலவது தேர்தலில் 37 வீதமான வாக்காளர்கள் தமது வாக்குகளை இரண்டாகப் பிரித்து வழங்கினர். ஜேர்மனியில் இது 20 வீதத்திற்கு மேலாகக் காணப்பட்டது.

இரண்டாவதாக, இரண்டு வாக்குகள் என்பது தேர்தல் முடிவுகளில் தந்திரோபாய வாக்களிப்பின் தாக்கங்களைக் குறைக்கிறது. தேர்தல் முறைமைகளில் நன்கு ஆய்ந்தறியப்பட்ட ஒரு விடயமான வேர்கர்ஸ் சட்டம் பன்முகதன்மை முறைகள் சிறிய கட்சிகளின் செயலாற்றுத்திறனை பாதிக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதற்கு காரணம் பெரும் கட்சிகள் தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையில் வெற்றிபெறுவதற்கான சாதகதன்மையை கொண்டிருப்பதும் சிறிய கட்சிகளுக்கு அளிக்கப்படும் வாக்குகள் "வீணடிக்கப்பட்ட வாக்கு"களாகக் கருதப்படுவதுமாகும். இரண்டு வேறுபட்ட வாக்குகளுடன் தொடர்புபட்ட இரு அடுக்கு ஆசனங்களைக் கொண்டிருப்பதன் மூலம் எம்.எம்.பி முறை இந்த பிரச்சினைத் தீர்க்கின்றது. வாக்காளருக்கு ஒரு வாக்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டால் ் எந்த வகை ஆசனத்தை விரும்பித்தெரிவு செய்வது என்பது தொடர்பாக அவர்கள் ஒரு தர்மசங்கடமான நிலைக்கு உள்ளாகலாம். உதாரணத்திற்கு குறிப்பிட்ட ஒரு வாக்காளரின் விருப்பம் ஏ கட்சியாக இருக்க, அந்தப்பகுதியில் பி அல்லது சி கட்சிகளுக்கே அம்மாவட்டத்தை வெல்லுவதற்குப் போதுமான ஆதரவு இருக்குமாயின், அந்த வாக்காளர் தந்திரோபாய அடிப்படையில் பி அல்லது சி கட்சிகளுக்கு வாக்களிக்க தீர்மானிக்கலாம். இரண்டு வாக்குகளை கொண்ட எம்.எம்.பி முறையில் இந்த தந்திரோபாய வாக்களிப்பிற்கான மனப்போக்கு பாராளுமன்றத்தில் (ஒரு கட்சிக்குள்ள) மொத்த ஆசனங்க்களில் எந்த தாக்கத்தையும் செலுத்தாது. அதன் அளவு மாவட்ட/விபி ஆசன விகிதத்தில்(கீழே ஆராயப்படும்) தங்கியிருக்கும். ஏனெனில் வாக்காளர்கள் தமது உள்ளூர் பா.உ.விற்கும் தேசிய பாராளுமன்றத்தின் ஆக்க அமைவிற்கும் தனித்தனியாக தமது விருப்பத் தெரிவை வெளிப்படுத்தலாம். பன்முக வாக்களிப்பு முறையில் வாக்குகள் வீணாக்கப்படும் என வாக்காளர்கள் கருதுவதால் சிறிய கட்சிகள்

---

[5] 20வது சீர்திருத்தத்தின் கீழ் குறிபிடப்பட்ட பகுதியையும் அவதானிக்குக.

[6]தேர்தல் சீர்திருத்தத்தில் ஒரு வெற்றிடம்/சன்டே டைம்ஸ் இலங்கை.(2016).sundaytimes.lk.28மார்ச்2016பெறப்பட்டது,http://www.sundaytimes.lk/150322/Sunday-times-2/electoral-reforms-in-a-vacuum-140881.html இலிருந்து

பாதிக்கப்படும் நிலையிலிருந்து அவற்றைக் பாதுபாப்பதற்கும் இது உதவும். ஜிபூட்டி தவிர ஏனைய அனைத்து எம்.எம்.பி முறை நாடுகளும் இரட்டை வாக்கு முறையை பயன்படுத்துகின்றன.

**விகிதாசார ஆசனங்கள் மற்றும் மாவட்ட ஆசனங்களுக்கிடையிலான விகிதம்**

விகிதாசார ஆசனங்களுக்கான மாவட்ட ஆசனங்களின் விகிதமும் தேர்தல் பெறுபேறுகளைப் பாதிக்கின்றன.

தேர்தல்முறை குறித்த பரிசோதனை ரீதியான ஆராய்ச்சிகள் மாவாட்ட மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்களுக்கு இடையில் 1:1 என்ற விகிதம் இரு அடுக்கு இணைந்த முறையில் மிகக் கூடுதலான அளவில் விகிதாசாரத்தன்மையை ஏற்படுத்துவதாக பல நிபுணர்கள் வாதிடுவதற்கு இட்டுச்சென்றுள்ளன. ஏனெனில் விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்களை பெற்ற கட்சிகளுக்கு உரிய முறையில் ஈடுசெய்வதற்காக போதிய ஆசனங்களை இது வழங்குகின்றது[7]. 1:1 என்ற விகிதம் எல்லாக் கட்சிகளும் மாவட்ட அளவில் மிகக்குறைந்தளவு ஆசனங்களை பெறுவதையும் அதேவேளை தங்களுக்கு உரிய விகிதாசாரப் பங்கை பெற்றுக்கொள்வதையும் பெருமளவு உறுதிசெய்கின்றது. உதாரணமாக, "அ" நாட்டின் எம்.எம்.பி முறைமை 80 மாவட்ட ஆசனங்களுக்கு 80 விகிதாசார ஆசனங்களை ஒதுக்குகின்றது. அ கட்சி 16 மாவட்ட ஆசனங்களைப் (ஒட்டுமொத்த 160ஆசனங்களில் 10 வீதம்) பெறுகின்றது. ஆனால் விகிதாசார பிரதிநிதித்துவ வாக்குகளின்படி அந்த கட்சி மொத்த ஆசனங்களுள் 40 வீத ஆசனங்களை (160 ஆசனங்களுள் 64 ஆசனங்கள்) பெறவேண்டும். எனவே, அ கட்சி அதற்குரிய விகிதாசார பங்கைக் கொண்டிருப்பதற்கு அதற்கு மேலும் 48 ஆசனங்கள் அல்லது மொத்த ஆசனங்களில் 30 வீதம் தேவைஃ.

| 80 மாவட்ட ஆசனங்கள்:80 விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| கட்சி | மாவட்ட ஆசனங்கள் | மாவட்ட ஆசனங்கள்: மொத்த ஆசனங்களின் வீதத்தில் | விகிதாசார அடிப்படையில் மொத்த ஆசனங்கள் | ஈடு செய்யும் விகிதாசார ஆசனங்கள் | விகிதாசார ஆசனங்கள்: மொத்த ஆசனங்களின் வீதத்தில் |
| A | 16 | 10% | 40% | 48 | 30% |
| B | 32 | 20% | 30% | 16 | 10% |
| C | 32 | 20% | 30% | 16 | 10% |
| மொத்தம் | 80 | 50% | 100% | 80 | 50% |

கீழே காட்டப்பட்டுள்ளவாறு, எம்.எம்.பி முறையை பின்பற்றும் நாடுகள் அனைத்துள்ளும் ஜேர்மனியே அதிகளவு விகிதாசார ஆசனப் பங்கீட்டை கொண்டுள்ளது. ஜிபூட்டி மிகக் குறைந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளது. 2013 இல் ஜிபூட்டி தனது பாராளுமன்ற ஆசனங்களில் 20 வீதத்தையே (65 ஆசனங்களில் 13) விகிதாசார பிரதிநிதித்துவத்திற்காக ஒதுக்கியது. கொள்கை அடிப்படையில், சிறிய கட்சிகளுக்கான ஆதரவுத்தளம் பன்முக வாக்களிப்பு ஆசனங்களை வெல்ல முடியாதளவிற்கு பூகோள அடிப்படையில் மிக ஆராய்தாக பரவிக் கிடப்பினும்கூட

[7]சியராவ், ஏ.(2013).அரசியல்ஆட்சிகளை ஒப்பிடதல்:ஒப்பீட்டு அரசியலிற்கான அறிமுகம்(3வது ed.,pp.109-191).டொரன்டோ பல்கலைக்கழக அச்சகம்.

வாக்காளர்கள் சிறிய கட்சிகளுக்கு வாக்களிக்கத் தீர்மானிப்பதற்கான சிறந்த ஊக்குவிப்புகளைக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும், ஜிபூட்டி போன்ற நாடுகளில் 80% மான ஆசனங்கள் தேர்தல் தொகுதிகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. தொகுதிவாரி வாக்களிப்பினால் ஏற்படுத்தப்படும் விகிதசமனின்மையை ஈடு செய்வதற்குப் ஒரு சிறியளவு விபி ஆசனங்களே இருப்பதனால் ஒரு சிறிய கட்சிக்கான விபி வாக்கு ஆசன ஒதுக்கீட்டின்மீது தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிடக்கூடும்9. எனவே, எம்எம்பி முறைமை இரட்டை வாக்குச்சீட்டைப் பயன்படுத்துவது மட்டுமின்றி, விபி வாக்குகளுக்குப் போதுமான ஆசனங்களை ஒதுக்குவதும் முக்கியமானதாகும். தேர்தல் தொகுதி மற்றும் விபி ஆசனங்களுக்கிடையிலான 50: 50 எனும் ஒரு பங்கீடு நடைமுறையில் விகிதசமத்துவத்தை உறுதிசெய்வதற்கு முற்றிலும் போதுமானதாகும்.

| எம்.எம்.பியின் எஸ்எம்டி: விகிதாச்சார பிரதநிதித்துவ விகிதம் (தொங்கு நிலை ஆசனங்கள் உள்ளடக்கப்படவில்லை) | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜேர்மனி | நியுசிலாந்து | ஸ்கொட்லாந்து | வேல்ஸ் | பொலிவியா | லெசோதா |
| 299:299 | 70:50 | 73:56 | 40:20 | 68:62 | 80:40 |

**மூடிய பட்டியல்**

வாக்களிப்பில் விகிதாசார பிரதிநிதித்துவ பகுதிக்கு வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கே பொதுவாக மூடப்பட்ட பட்டியல் பயன்படுத்தப்படுகின்றது. எந்த வேட்பாளர்களுக்கு ஒதுக்கிய ஆசனம் என்பதையும் அது எந்த ஒழுங்கில் அமையும் என்பதையும் தேர்தலுக்கு முன்னர் அது வாக்காளர்களுக்கு அறிவிக்கும். உதாரணத்திற்கு எக்ஸ் கட்சியின் பட்டியலில் திரு. ஏ முதல் வேட்பாளராக இருந்து, கட்சிக்கு ஒரு விகிதசார ஆசனம் கிடைத்தால், திரு. ஏ மாத்திரமே அந்த ஆசனத்தை பெறுவதற்குத் தகுதியுடையவராவார். இது பட்டியலில் உள்ள வேட்பாளர் ஒவ்வொருவரதும் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து வாக்காளருக்கு தெரிவிக்க உதவும். பட்டியலில் முதலில் உள்ள வேட்பாளர்களே தெரிவுசெய்யப்படக்கூடியதாக இருக்கும் அதேவேளை, பட்டியலில் இறுதியில் உள்ள வேட்பாளர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு. பட்டியல் சமர்ப்பிக்கபட்டதன் பின்னர் அந்த பட்டியலில் காணப்படும் ஒரு வேட்பாளரின் பெயருக்குப் பதிலாக வரிசையொழுங்கில் கீழே இருக்கும் வேறு பெயர்களைக்கொண்டு அதனை பிரதியீடு செய்வதற்கான தற்றுணிபு அதிகாரம் கட்சிக்கு இல்லை. மேலும் ஆரம்பப் பட்டியலில் இல்லாத வேட்பாளர்களை அது புதிதாக புகுத்தவும் முடியாது. ஒரு திறந்த பட்டியல் (இலங்கையில் விருப்பு வாக்குமுறை என்று குறிப்பிடப்படும்) எம்.எம்.பி முறையில் உள்ளடக்கப்படலாம். ஆனால் இது ஜனாதிபதியின் தேர்தல் வாக்குறுதிகளின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்ட விடயம் என்பதால் அது குறித்து ஆராயப்படமாட்டாது.

தற்போது தேசியப்பட்டியலில் உள்ள வரிசையொழுங்கையும் வேட்பாளர்களையும் மாற்றுவதில் அரசியல் கட்சிகள் கணிசமான தற்றுணிபு அதிகாரத்தைக் கொண்டிருப்பதற்கு இலங்கை அனுமதிக்கிறது. சட்டத்தினால் கட்டுண்ட வரிசையொழுங்கு எதுவும் இல்லை. பட்டியலில்

இல்லாதவர்களும் மாவட்ட மட்ட ஆசனத்திற்காக தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுமான வேட்பாளர்களும்கூட நியமிக்கப்படலாம். மாவட்ட அளவில் போட்டியிட்ட வேட்பாளர்களை "தேசிய பட்டியல்" மூலம் நியமிக்கும் நடைமுறை முழுமையாக கட்சியின் தற்றுணிபின்பால்பட்டதாகும். இந்த நடைமுறை சர்வதேச நியமங்களுக்கு அமைவானதாக இல்லை என்பதோடு, தேசியப் பட்டியலில் உள்ள எந்த வேட்பாளர் இறுதியில் தெரிவு செய்யப்படுவார் என்பது தொடர்பாக ஒரு மூடுமந்திரத் தன்மையையும் ஏற்படுத்துகிறது. ஒரு எம்.எம்.பி முறை தற்றுணிபு வாயிலான நியமனங்களை கொண்டிருக்கலாகாது. மாறாக, சர்வதேச ரீதியில் பிரயோகிக்கப்படும் ஒரு மூடப்பட்ட பட்டியல் கோட்பாட்டை பின்பற்றவேண்டும்.

தோல்வி அடைந்த வேட்பாளர்களை உள்வாங்குவதும் தற்றுணிபிற்கான தேவையை இல்லாதொழித்து, "மிகச்சிறந்த தோல்வியாளர்களை" தெரிவு செய்வதற்கான ஒரு சூத்திரத்தின் வாயிலாக செய்யப்படலாம். உதாரணமாக, ஒவ்வொரு நான்காவது ஆசனத்தையும் தோல்வியடைந்த வேட்பாளருக்கு ஒதுக்க முடியும். மூடப்பட்ட பட்டியல் சிறுபான்மைக் குழுக்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கும் சாதகமானது. ஏனெனில், இவர்களுக்காகான ஒதுக்கீடுகளை கட்சி பட்டியலில் இணைக்க முடியும். அதன் மூலம் அதிகளவு பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யலாம்.[8] ஜேர்மன் பாராளுமன்றத்தில் ஒரு சில தொகுதிகளை தவிர ஏனைய அனைத்து எம்எம்பி முறைமையும் சிறுபான்மைக் குழுவினருக்கான கோட்டாவை ஏற்படுத்துமுகமாக நியுசிலாந்தின் சுதேச மாவோரி சமூகத்திற்கான ஒதுக்கீடுகளைப் போன்ற மூடப்பட்ட பட்டியலைப் பயன்படுத்துகின்றன.[9]

**விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்காக கட்சி பட்டியலை கணிப்பிடும் முறை**

இலங்கை தற்போது ஹெயர் கோட்டா என அழைக்கப்படும் "மிகப்பொரிய மீதி" முறையை பயன்படுத்துகின்றது. இது அதிக விகிதாசாரத்தன்மை கொண்ட முறைகளுள் ஒன்றென கருதப்படுகின்றது. சிறிய கட்சிகளுக்கு கிடைக்கவேண்டியதை விட சற்று அதிகமான ஆசனங்கள் கிடைப்பதும் பெரிய கட்சிகளுக்கு கிடைக்கவேண்டியதை விட குறைவான ஆசனங்கள் கிடைப்பதும் இதற்கு காரணம். இந்த முறை பின்பற்றப்படும் ஒரேயொரு எம்.எம்.பி முறை லெசதோ ஆகும்.[10] டி கொன்ட் மற்றும் செயின்ட் லீக் போன்ற ஏனைய ஆசன ஒதுக்கீட்டு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

ஹெயர் கோட்டா முறை விசேடமாக விகிதாசார முடிவுகளை வெளிக்கொணர்கின்றது. இதன் காரணமாக இலங்கையில் எம்.எம்.பி முறையில் பயன்படுத்துவதற்கு அது ஒரு சிறந்த முறையாக அமையலாம். எனினும் பாராளுமன்றம் தற்போதைய முறையை மாற்றத் தீர்மானித்தால், செயின்ட் லீக் முறையும் சமமான விகிதாசரத் தன்மையைத் தரக்கூடியதாகும். ஜேர்மனியும் நியுசிலாந்தும் ஏனைய குறைந்தளவு விகிதாசாரத்தன்மை கொண்ட முறையை பயன்படுத்திய பின்னர் தற்போது இந்த முறையை பயன்படுத்துகின்றன.[11] தற்போது ஸ்கொட்லாந்து, பொலிவியா மற்றும் வேல்ஸ் ஆகியன டி கொன்ட் முறையை பயன்படுத்துகின்றன.[12]

---

[8] திறந்த,முடப்பட்ட சுதந்திரமான பட்டியல்.(2016).எசிஇ செயற்றிட்டம்:தேர்தல் அறிவு வலையமைப்பு.7மார்ச்2016பெறப்பட்டது,http://aceproject.org/ace-en/topics/es/esd/esd02/esd02e/esd02e03 இலிருந்து

[9] மாவோரிபிரதிநிதித்தவம்.(2014).தோதல்ஆணையகம்.8மார்ச்2016பெறப்பட்டது,http://www.elections.org.nz/voting-system/maori-representation இலிருந்து

[10] ஜஎவ்ஈஎஸ் தோதல் வழிகாட்டிதேர்தல்கள்: ஜைபுட்டி பாராளுமன்றம் 2013.(2016).தேர்தல்வழிகாட்டி.org. 16 மார்ச் 2016 பெறப்பட்டது,http://www.electionguide.org/elections/id/1654/இலிருந்து

[11] செயின்ட்லாகோ ஒதுக்கீட்டுமுறை.(2016).தேர்தல்கள்:தேர்தல் ஆணையகம். 14 மார்ச் 2016 பெறப்பட்டது,http://www.elections.org.nz/voting-system/mmp-voting-system/sainte-lagu%C3%AB-allocation-formulaஇலிருந்து

[12] போலிவியா:தோதல்சீர்திருத்தம்- இலத்தீன் அமெரிக்கா.(2016).ஏசிஈ செயற்றிட்டம்:தேர்தல் அறிவு வலையமைப்பு.9மார்ச்2016பெறப்பட்டது,http://aceproject.org/main/English/es/esy_bo.htmஇலிருந்து

**தேர்தல் வரம்பெல்லை**

ஒரு கட்சி பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான குறைந்த பட்ச ஆதரவாகிய தேர்தல் வரம்பெல்லை கட்சியின் பிரதிநிதித்துவத்தின் அளவை பாதிக்கின்றது. ஒரு கட்சி ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் மொத்த வாக்குகளில் 5% த்தை பெறவேண்டுமென இலங்கை தற்போது அவற்றிற்கு நிபந்தனை விதிக்கிறது.[13]

பெரும்பாலான எம்.எம்.பிக்கள் முழுவிகிதாசார பிரதிநிதித்துவ வாக்குகளில் பெறப்பட்ட வாக்குகளின் வீதம் அல்லது வெல்லப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வரம்பெல்லையை விதித்துரைக்கின்றன. நியுசிலாந்தில் கட்சிகள் ஒரு மாவட்ட ஆசனத்தை (ஆசனங்களின் அண்ணளவான 0.83%) அல்லது 5வீத வாக்குகளைப் பெறவேண்டும்[14], மேலும் 10% வரம்பெல்லையைப் பயன்படுத்தும் ஜிபூட்டி போன்ற நாடுகள் சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவத்தைப் பொரிதும் குறைக்கின்றன. கூடிய தேர்தல் வரம்பெல்லை பாரிய விகிதசமனின்மைக்கு இட்டுச் செல்லும். வரம்பெல்லை அளவுக்கதிகம் உயர்வானதாக இல்லாதிருப்பதை உறுதி செய்வது இலங்கை பல கட்சி பிரதிநிதிதிதுவத்தை மேம்படுத்த உதவும்.

**ஏன் 20 வது திருத்தத்தினால் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது?**

அரசியலமைப்பிற்கான 20 வது திருத்தத்தின் நகல்வடிவே (20A) ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞபானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தேர்தல் சீர்திருத்தத்திற்கான யோசனைகளை முன்னெடுப்பதற்கான அரசாங்கத்தின் ஆரம்பத் தீர்வாலோசனையாகவிருந்தது. இந்த திருத்தம் 2015 யூன் மாதம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் அது பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

ஒரு எம்.எம்.பி முறை என்றவாறு கலந்துரையாடப்பட்ட சிறிய தேர்தல் மாவட்டங்களை அறிமுகஞ்செய்தல் மற்றும் விகிதாசாரத்தன்மையைப் பாதுகாத்தல் எனும் இரட்டை வாக்குறுதியை நிறைவேற்றும் ஒரு தேர்தல் முறைமையை வழங்குவதற்கான அதன் வல்லமையை பாரதூராமாகப் பாதிக்கும் சில குறைபாடுகள் அதில் உள்ளன. 20A சிறிய (குறிப்பாக தனி உறுப்பினர்) மாவட்டங்களை மீள அறிமுகப்படுத்தியிருக்கும். ஆனால், விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை பாதிப்புற்றிருக்கும். சில முக்கிய பலவீனங்கள் குறித்து கீழே ஆராயப்படுகின்றது.

**ஒரு வாக்கு போதுமானதல்ல**

20A வாக்காளருக்கு பதிவுசெய்யப்பட்ட ஓர் அரசியல்கட்சி அல்லது சுயேட்சை குழுவைச் சேர்ந்தவராக இருக்கவேண்டியவரும் தங்கள் விருப்பத்திற்குரியவருமான வேட்பாளரை தெரிவு செய்வதற்கான ஒருவாக்கை வழங்கும். அந்த வாக்கு உள்ளுர் பன்முகத்தன்மை வாக்களிப்பு மற்றும் பரந்துபட்ட தேசிய மற்றும் உப தேசிய அளவிலான விகிதாசார பிரதிநிதித்துவம் ஆகிய இரண்டையும் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும். உத்தேச இந்த உபதேசிய அலகு தற்போது பயன்படுத்தப்படும் பெரும் தேர்தல் மாவட்டத்தினை குறிக்கின்றது.

[13]இலங்கைபாராளுமன்றம்- தேர்தல்முறை.(2012).parliament.lk.15மார்ச்2016பெறப்பட்டது,http://www.parliament.lk/members-of-parliament/the-system-of-elections-in-sri-lanka/the-electoral-systemஇலிருந்து

[14]எம்எம்பி வாக்களிப்புமுறை.(2014).தேர்தல் ஆணையகம்.8மார்ச்2016பெறப்பட்டது,http://www.elections.org.nz/voting-system/mmp-voting-systemஇலிருந்து

மேலே குறிப்பிட்டபடி, இது உள்ளூர் மட்டத்தில் பன்முகத்தன்மையை அடிப்படையாக கொண்ட தெரிவு காரணமாக தந்திரோபாய அடிப்படையில் வாக்களிக்கக் கூடியவர்களும் பின்னர் தேசிய அல்லது உப தேசிய மட்டத்தில் தங்கள் விருப்புகளை இரண்டாக்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் தடுக்கப்படுபவர்களுமான வாக்காளர்களுக்கு ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும். டுவேர்கர் சட்டத்தின் படி, தனி வாக்கு முறையானது, முதலிரு பெரும் கட்சிகளிற்கு சாதகமாக காணப்படுவதுடன், பன்மைத்துவ வாக்களிப்பு முறைமையில் வாக்காளர்கள் தங்கள் விருப்புக்குரிய வேட்பாளரை விட வெற்றிவாய்ப்பு அதிகமாக உள்ள வேட்பாளருக்கு வாக்களிக்கத் தீர்மானிக்கும் தந்திரோபாய வாக்களிப்பிற்கு வழிகோலுகின்றது. டுவேர்கர் இதனை உளவியல் காரணி என குறிப்பிடுகின்றார். ஏனெனில் வாக்காளர்கள் தேர்தல் சட்டங்கள் எவ்வாறு தங்கள் வாக்குகளை ஆசனங்களாக மாற்றுகின்றன என்ற கணிப்பீட்டின் அடிப்படையில் வாக்களிப்பில் தங்களுடைய இயல்பான தெரிவிலிருந்து விலகிச்செல்கின்றனர். இதன் காரணமாக தனியொரு வாக்கும் பெரிய கட்சிகளின் துருவமயப்படுத்தலும் வாக்காளர்கள் தங்கள் உண்மையான தெரிவை தேர்வு செய்வதற்கான திறனை பாதிக்கின்றன.[15]

**ஆசன விகிதாசாரங்கள் மாவட்ட விகிதாசாரத்திற்காக திரிவுபடுத்தப்படுகின்றன**

20 வது திருத்தம் 237 ஆசனங்களை கொண்ட ஒரு 3 அடுக்குமுறையை முன்வைத்தது: 145 உள்ளூர் தேர்தல் மாவட்டங்கள் (FPTP'), தற்போதைய தேர்தல் மாவட்ட மட்டத்திலான 55 விகிதாசார ஆசனங்கள், 37 தேசிய விகிதாசார ஆசனங்கள்.[16] மாவட்ட ஆசனங்களுக்கு சாதகமாகவுள்ள 3:2 என்ற இவ்விகிதம் விகிதாசாரத்தன்மையை பேணுவதற்கு போதியதாக அமையாது.

மேலும், இரண்டு விகிதாசார அடுக்குகள் உள்ளிட்ட 3 அடுக்கு முறை என்பது விகிதாசார தன்மையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். 20ஆம் திருத்தம் 22 தேர்தல் மாவட்டங்கள் (உப தேசிய விபி அடுக்காக முன்வைக்கப்பட்டிருப்பவை) மத்தியில் பகிரப்படுவதற்கு 55 ஆசனங்களை மாத்திரம் ஒதுக்கியுள்ளது. இது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கிடைக்கக்கூடிய விகிதாசார ஆசனங்களின் எண்ணிக்கையை தீவிரமாக மட்டுப்படுத்துகிறது. விகிதாசார ஆசனங்கள் மூன்று அடுக்குகளாகப் பிரிக்கப்படுவது, விகிதாசார முடிவுகளை மேலும் பாதிக்கும். ஏனெனில், விபி ஆசன ஒதுக்கீடு மேலும் பிரிக்கப்படுகிறது உ.ம். 20வது திருத்தத்தின்கீழ், மாவட்ட மட்டத்திலான பன்மைத்துவ/விபி விகிதம் 2:6:1 ஆகும்.

இந்த ஆய்வில் பார்க்கப்பட்ட சர்வதேச எம்.எம்.பி முறைகள் அனைத்தும் இரண்டு அடுக்கு முறையை பயன்படுத்துகின்றன. ஸ்கொட்லான்ட் மற்றும் வேல்ஸ் இல் போன்று விகிதாசார அடுக்கு என்பது மாகாணங்களாவிருந்தால், ஒரு தேசிய மட்ட விபி நிரலைப் பயன்படுத்தும் நியுசிலாந்து போன்ற எம்எம்பி முறைமைகளில் உள்ள அளவிற்கு பெறுபேறுகள் விகிதாசாரத் தன்மை கொண்டதாக அமையாது. எனவே, விகிதாசாரத் தன்மையை மேம்படுத்துவதற்கு விபி ஆசன விகிதாசாரத்திலான ஒரு சிறு அதிகரிப்போடு விபி ஆசன ஒதுக்கீடுகள் ஒரு தனி தேசிய

[15] பெனொய்ட்,கே.(2006).டுவேர்கர் சட்டமும்-தேர்தல்முறை குறித்த ஆய்வும். பிரான்ஸ்அரசியல்,4,69-83.பெறப்பட்டது http://file:///home/chromos/u-f4a7cf4513c4eddce3c4c1324571850d09a4434/Downloads/Benoit_FrenchPolitics_2006%20(2).pdf இலிருந்து

[16] சந்திரசேகர,ஜி.(2015).இலங்கை பாராளுமன்றம் 237 ஆசனங்களுடன்கூடிய 20திருத்தத்திற்கு அனுமதிவழங்கியுள்ளது. இலங்கை வணிகம் வலைத்தளம். http://www.lankabusinessonline.com/sri-lankas-cabinet-approves-20th- amendment-with-237-parliamentary-seats/இலிருந்து பெறப்பட்டது

அடுக்குடன் இணைக்கப்படுதலானது, மேலும் கூடிய விகிதாசாரத்தன்மையை உறுதி செய்யும் மிக எளிமையான முறையாகும்.

மூன்று அடுக்கு முறையை பின்பற்றும்போது, ஆசன பகிர்வு மற்றும் உப தேசிய அலகின் அளவு ஆகியவற்றில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். சமீபத்திய ஆய்வொன்றில் கரேவொலன் விகிதாசாரதன்மையை பேணுமுகமாக, இலங்கையின் எம்.எம்.பி முறையில் மேலும் சிறந்ததோர் ஆசன பங்கீட்டிற்காக வாதிட்டார்: 119 தொகுதிவாரி ஆசனங்கள், 87 மாகாண விபி ஆசனங்கள் மற்றும் 25 தேசிய விபி.[17] மாகாணங்கள் புவியியல் ரீதியாக பாரிய அலகுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலானவையாகவும் (9 மாகாணங்கள்) உள்ளமையானது, 22 தேர்தல் மாவட்டங்களைவிட உப தேசிய அளவில் அதிகளவு விகிதாசார முடிவுகளை பெற வழிசெய்யலாம். உதாரணத்திற்கு உபதேசிய அளவில் போதாததாகக் காணப்படும் 55 விபி ஆசனங்களின் ஒதுக்கீடுகூட, பன்மைத்துவ வாக்களிப்பினால் ஏற்படும் விகித சமனின்மையை சரி செய்வதற்கு மாகாணமொன்றிற்குச் சராசரியாக 6 விபி ஆசனங்களைத் தருகிறது. அதேவேளை, 20வது திருத்தம் தேர்தல் மாவட்டமொன்றிற்கு 2.5 வீத ஆசனங்களையே ஒதுக்கும். மாவட்டத்தினை உப தேசிய அலகாகக் கொள்வதாயின், 20வது திருத்தத்தில் விதித்துரைக்கப்பட்டவாறு மாவட்ட விகிதாசார ஆசனப் பற்றாக்குறையை தேசியப்பட்டியலில் மேலிருந்து நிரப்புதல் மற்றும் பன்மைத்துவ வாக்களிப்பு ஆசனங்களோடு ஒப்பிட்டு மாவட்ட விகிதாசார ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகியவற்றைச் செய்வது அவசியமாகும்.

சிறியதாகவும், எனவே பொதுவாக பெரிய கட்சிகளுக்கு சாதகமாகவும் காணப்படும் தற்போதைய தேர்தல் மாவட்டங்களைவிட, மாகாண மட்டத்தின் மூலம் புவியியல் ரீதியான பிரதிநிதித்துவத்தை மேம்படுத்த மூன்று அடுக்கு முறை பயன்படுத்தப்படலாம் என்று வொலன் கருதுகின்றார். எனினும், ஒட்டுமொத்த எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் அமைந்திருப்பதை உறுதிசெய்வதற்கு இந்த முறைமைக்கு ஒரு தேசிய விகிதாசார அளவும் அவசியம். மேலும், தேசிய அளவில் விகிதாசார ஆசனங்களை கணிப்பிட்டு மாகாண பட்டியல் மூலம் ஆசனங்களை ஒதுக்கும் இரண்டு அடுக்கு முறை புவியல் ரீதியிலான மற்றும் விகிதாசார அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்கின்றது. இறுதியில், விகிதாசார ஆசன ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட்டால், தேசிய அளவிலான விகிதாசாரம் அதிகளவு விகிதாசார முடிவுகளை உருவாக்கலாம். எனினும் மாகாண மட்ட விகிதாசாரம் அதிகளவான புவியியல் பிரதிநிதித்துவத்தை உருவாக்குகிறது.[18] மூன்று அடுக்கு முறைக்கு விகிதாசாரதன்மையை உறுதிப்படுத்தும் திறன் அதிகளவு உள்ள போதிலும், இரண்டு அடுக்கு முறை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவானது; அனைத்து எம்.எம்.பி முறைகளிலும் அது வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டுள்ளது; வாக்காளர்களின் விருப்பிற்கு நேரடியாக ஒத்திசைவாக காணப்படுகின்றது: இரண்டு அடுக்குகளுக்கு இரண்டு வாக்குகள்.

**மூடப்பட்ட பட்டியல்**

மேலே குறிப்பிட்டவாறு, எம்எம்பி முறையை பயன்படுத்தும் நாடுகள் அனைத்தும் மூடப்பட்ட பட்டியலை பயன்படுத்துகின்றன. தேர்தலில் மிக அதிக வீதத்திலான வாக்குகளை வென்றவர்களின் ஒழுங்கில் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளருக்கு விகிதாசார பிரதிநிதித்துவ

[17] வொலன்,கே.(2015).இலங்கையின் பாராளுமன்றத்திற்கான கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமைக்கான வழிமுறைகள்.முன்னிலைப்படுத்தல்,கொழும்பு.

[18] Ibid

ஆசனங்களுள் அரைவாசி ஆசனங்கள் ஒதுக்கப்படுவதற்கு 20வது திருத்தம் அனுமதிக்கிறது.[19] தற்போதைய நடைமுறைகளுக்கு ஏற்ப தேசியப் பட்டியலில் உள்ள ஒரு பா.உ. இறந்தால் அல்லது இராஜினாமா செய்தால் அவரது இடத்திற்கு ஒரு புதிய பா.உ. வை தெரிவு செய்வதற்கான முழு தற்றுணிபு அதிகாரத்தையும் உத்தேச 20 வது திருத்தம் அரசியல் கட்சிகளுக்கு வழங்குகின்றது. அத்திருத்தம் குறிப்பிடுவதாவது:

"குறிப்பிட்ட தேர்தல் தொகுதிக்கு, தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களிருந்து அல்லது பெயர் நியமனம் செய்யப்பட்டு ஆனால் தேர்தலில் போட்டியிடாத வேட்பாளர்களிலிருந்து ஓர் உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் அத்தகைய அரசியல் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவருக்கு உண்டு."[20]

மூடப்பட்ட பட்டியல்கள்தான் பா.உ.கள் வாக்காளர்களுக்கு பொறுப்பு கூறுபவர்களாக இருக்கச்செய்வதற்கான மிகவும் பயனுள்ள வழியாகும். தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ், வாக்காளர்கள் தாம் விரும்பும் கட்சியில் யார் தம்மை பிரதிநிதித்துவம் செய்வார் என்பதை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பில்லை என்பதோடு, அரசியல் கட்சிகள் தமது கட்சி சார்புகளைப் பொருட்படுத்தாது வேட்பாளரை தெரிவுசெய்ய முடியும். தோல்வியுற்ற வேட்பாளர்களுக்கான கோட்டாவைக் கொண்டுள்ள மூடப்பட்ட பட்டியலை உபயோகிப்பது இந்த வேட்பாளர்களை உள்ளடக்குவதில் 20வது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டதை விட அதிகளவு ஜனநாயக தன்மையை உறுதிசெய்யும். முன்னர் குறிப்பிட்டது போல், மூடப்பட்ட பட்டியல்கள் பாரம்பரியமாக குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் குழுக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க ஓர் ஆக்கபூர்வமான வழியாக உள்ளன. (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் பிரதிநிதித்தவத்தை உள்ளடக்குதல் எனும் பகுதியை பார்க்கவும்)

**போனஸ் ஆசனங்கள்**

தற்போதைய முறைமையின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான எண்ணிக்கையிலான வாக்குகளை பெற்றுக்கொள்ளும் அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு ஒரு உறுப்பினரை பெறுவதற்கு உரித்துடையாதாகின்றது.[21] போனஸ் ஆசனங்கள் பெரிய கட்சிகளுக்கு மாவட்டங்களில் மேலதிக ஆசனங்களை வழங்குவதன்மூலம் விகிதாசாரத்தன்மையை திரிபுபடுத்துகின்றன. மிக அண்மைய பாராளுமன்றத் தேர்தலில் மவிமு தேசிய வாக்குகளில் விகிதாசார ரீதியில் அதிக வாக்குகளைப் பெற்றது. எனினும் அதற்கு நான்கு போனஸ் ஆசனங்கள் மாத்திரமே கிடைத்தன. அதேவேளை, ததேகூ ஒரு சில மாவட்டங்களில் செறிந்து காணப்படும் அதன் வாக்காளர் ஆதரவுத் தளத்தின் காரணமாக, மவிமு வை விட 27000 குறைவான வாக்குகளுடன் 14 ஆசனங்களைப் பெற்றது.

போனஸ் ஆசனங்கள் ஏற்படுத்தும் விகிதாசர சமனின்மையிருந்தும், அவை 20வது திருத்தத்திலும் பின்வருமாறு உள்ளடக்கப்பட்டுள்ளன: ஒரு தேருநரைச் சேர்த்துக்கொள்வதானது, அத்தகைய தேருநர் எந்தத் தேர்தல் மாவட்டத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டாரோ, அந்த தேர்தல் மாவட்டத்திற்கு ஒரு மேலதிக உறுப்பினரை தெரிவு செய்வதற்கு உரித்துடையதாக்குகிறது".

---

[19] Ibid

[20] பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்களக்கான கொள்கை திட்டமிடல், பொருளாதார கொள்கை, சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார கொள்கைகள்,.(2015). இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் வர்த்தமானி: அரசியலமைப்பின் இருபதாவது சீர்திருத்தம். கொழும்பு:அரச அச்சீட்டு திணைக்களம்.

[21] இலங்கை பாராளுமன்றம் - தேர்தல்முறைமை.(2012).parliament.lk.2016மார்ச்15பெறப்பட்டது,http://www.parliament.lk/members-of-parliament/the-system-of-elections-in-sri-lanka/the-electoral-systemஇலிருந்து

பன்முக வாக்களிப்பில் காணப்படும் சமனற்ற விகிதாசாரதன்மையை நிவர்த்தி செய்ய எம்எம்பி முறை விகிதாசார வாக்களிப்பு முறைமை பயன்படுத்தப்படுகிறது. அதனால், பொதுவாக விகிதாசாரமின்மைக்குக் காரணமாக அமையும் போனஸ் ஆசனங்களை தொடர்ந்தும் பயன்படுத்துவது ஒரு எம்எம்பி முறைமையில் விபி ஆசனங்கள் என்ற எண்ணக்கருவிற்கு எதிராகச் செயற்படும்.[22]

**கலப்பு உறுப்பினர் விகிதாசாரமுறை தொடர்பான கரிசனைகள்**
**தொங்குநிலை ஆசனங்கள்**

எம்.எம்.பி முறையின் கீழ் ஓர் அரசியல் கட்சி தமக்கு கிடைக்கவேண்டிய ஆசனங்களைவிட அதிகளவு பன்முகத்தன்மை ஆசனங்களை பெறும்போது தொங்கு நிலை ஆசனங்கள் வழங்கப்படுகின்றன. அந்த தொங்குநிலை ஆசனங்கள் வழங்கப்படும்போது கட்சி மேலதிக ஆசனங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றது. உதாரணமாக, அ கட்சி அதன் தேசிய விகிதாசார வாக்குகளின்படி, 10 ஆசனங்களை பெறவேண்டும் எனக் கருதப்பட்டபோதும், அதற்கு ஆறு தொகுதிவாரி ஆசனங்களே கிடைத்துள்ளன எனும்போது அந்த கட்சிக்கு மேலும் நான்கு ஆசனங்கள் வழங்கப்படும். எனினும் 10 ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட ஆ கட்சி 11 ஆசனங்களைப் பெற்றால் அந்த மேலதிக ஆசனம் தொங்கு நிலை ஆசனம் ஆகும்.[23]

தற்போதைய எம்.எம்.பிக்கள் 1) ஆளும் அமைப்பை பெரிதாக்குவதன் மூலம் அல்லது 2) நிலையான முறைமைக்குள் தொங்கு ஆசனங்களை சேர்த்துக் கொள்வதன் மூலம் தொங்கு ஆசனங்களைக் கையாள்வதற்கான வெவ்வேறு முறைகளைக் கையாளுகின்றன. எஞ்சிய ஆசன முறை தற்போது ஜேர்மனி பன்டென்ஸ்டாக் இல் மாத்திரம் பயன்படுத்துகின்றது (2013 இலிருந்து ) என்பதோடு, தொங்கு நிலை ஆசனங்களுக்கு இடமளிப்பதற்கான மிக அதிகமாக விகிதாசார தன்மை கொண்ட முறையாகவும் இது அமைகிறது. ஜேர்மன் முறையில் தொங்கு நிலை ஆசனங்கள் வழங்கப்படுகின்றன. மேலதிக ஆசனங்கள் வேறு கட்சிகளுக்குரிய ஆசனங்களின் விகிதாசார பங்கினைப் பேணுமுகமாக அவற்றிற்கு வழங்கப்படுகின்றன. இந்த முறைமை அனைத்து கட்சிகளுக்கும் முழுமையான ஈடுசெய்தலை அனுமதிப்பதோடு, கிட்டத்தட்ட 100% விகிதாசாரத் தன்மையையும் உறுதி செய்கிறது.[24]

எம்.எம்.பி முறை தொங்கு ஆசனங்களை வழங்குவதற்கும் அத்துடன், மேலதிக சமப்படுத்தும் ஆசனங்களை வழங்காமல் விடுவதற்கும் விரும்பலாம். தற்போது நியுசிலாந்து பாராளுமன்றம் தனது நியம அளவிற்கு அப்பால் அதன் அளவை விரிவாக்குவதை தடுக்குமுகமாக இந்த முறையைப் பயன்படுத்தப்படுகின்றது.[25] இந்த முறை நியுசிலாந்தின் 120 உறுப்பினர்

---

[22] பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்களக்கான கொள்கை திட்டமிடல், பொருளாதார கொள்கை, சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார கொள்கைகள்,.(2015).இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் வர்த்தமானி:அரசியலமைப்பின் இருபதாவது சீர்திருத்தம்.கொழும்பு:அரச அச்சீட்டு திணைக்களம்.

[23] Overhangs.(2012).எம்எம்பி விமர்சனம்:வேண்டும் உங்கள் சொற்களும் பங்களிப்பும்.7மார்ச்2016,http://www.elections.org.nz/sites/default/files/bulk-upload/documents/Overhangs_submissions.pdfஇலிருந்து

[24]ஜேர்மன் பூண்டஸ்டக்கிற்கு உறுப்பினர்களை தெரிவுசெய்யும் முறை.(2016).டெட்ஸ்சர் பூண்டஸ்டக். 8மார்ச்2016 பெறப்பட்டது,http://www.bundestag.de/htdocs_e/bundestag/elections/electionresults/election_mp/245694 இலிருந்து

[25] Overhangs.(2012).எம்எம்பி விமர்சனம்:வேண்டும் உங்கள் சொற்களும் பங்களிப்பும்.7மார்ச்2016,http://www.elections.org.nz/sites/default/files/bulk-upload/documents/Overhangs_submissions.pdfஇலிருந்து

பாராளுமன்றத்திற்கு ஒருசில ஆசனங்களையே கூடுதலாக சேர்த்துக்கொள்கிறது. அதேவேளை ஜேர்மனியின் பன்டென்ஸ்டாக் அதன் அளவை குறிப்பிடத்தக்க அளவிற்கு வேறுபடுத்துகிறது.

தொங்கு நிலை ஆசனங்களுக்கான மூன்றாவது நடைமுறை ஆகக் குறைந்த அளவு விகிதாசார தன்மையாகும் என்பதோடு, அது ஸ்கொட்லாந்து, வேல்ஸ், பொலிவியா மற்றும் லெசெதோ போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. இந்த முறைமை தொங்கு நிலை ஆசனங்களை வழங்குகின்றது. அதன்போது ஆட்சி மன்றத்தின் அளவைப் பேணுமுகமாக அதற்கு இணைவான எண்ணிக்கையிலான ஆசனங்கள் சட்டவாக்கச் சபையிலுள்ள மொத்த விகிதாசார ஆசனங்களிலிருந்து கழிக்கப்படுகின்றன.[26] இதன் காரணமாக தொங்கு நிலை ஆசனங்களைக்கொண்ட கட்சிகளுக்கு விகிதாசார ரீதியாக கிடைக்கவேண்டியதை விட அதிகமாக வழங்கப்படுகின்றது. ஏனைய கட்சிகளுக்கு விகிதாசார ரீதியாக குறைவாகவே கிடைக்கின்றது.

**பெண்கள் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்குதல்**

இலங்கையின் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் வெறும் 6% த்திற் குறைவாகவே காணப்படுகின்றது. 11பேர் மாவட்ட ஆசனங்களைப் பெற்றுள்ள அதேவேளை, இரண்டுபேர் மாத்திரம் தேசிய பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேலும், பெண்களை உள்ளடக்குவதற்கு எவ்வித சட்ட நிபந்தனைகளோ அல்லது சுயவிருப்பத்திலான கோட்டாக்களோ இலங்கையில் தேசிய மட்டத்தில் அரசியல் கட்சிகளினால் பின்பற்றப்படவில்லை. பெண்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளூர் வாக்குகள் மூலம் அல்லது விகிதாசார வாக்குகள் மூலம் அதிகரிக்கலாம். எனினும் வேட்பளர்களின்மீதும் அவர்களைப் பட்டியலில் சேர்த்தலின்மீதும் அரசியல் கட்சிகளே அதிகக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதனால், அரசியல் கட்சிகளின் கட்சி நிரல் விதிகளை அமுல்படுத்துவதே பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பயன்மிக்க வழியாகும். எனவே, இரட்டை டிக்கட் ஒன்றைக் கொண்டிருப்பதும் விபி நிரலில் பெண்களைச் சேர்த்துக் கொள்வதும் அதிக பெண் பிரதிநிதித்துவத்தை உருவாக்கும்.

கடந்த இரண்டு தசாப்தகாலமாக பொலிவியா பெண்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்குவதற்கு தீவிர முயற்சியொன்றை மேற்கொண்டுள்ளது. 1993 இல் பொலீவியாவின் 13% பிரதான பிரதிநிதிகள் பெண்களாக இருந்தனர். எனினும் 95 இல் பொலிவியா எம்.எம்.பி முறையை நிறைவேற்றி கட்சி நிரல் கோட்டா ஒன்றை சேர்த்துக்கொண்டதோடு, அந்த நிரலிலுள்ள வேட்பாளர்களுள் 30% மானோர் பெண்களாக இருக்கவேண்டுமென நிபந்தனை விதித்தது.[27] இன்று பொலிவியா ஒவ்வொரு கட்சி பட்டியலிலும் இரு பாலாரையும் ஒன்றையடுத்து ஒன்று மாறி மாறி உள்ளடக்கியிருக்கவேண்டுமென விதிக்கிறது. இதன் காரணமாக 2014இல் இடம்பெற்ற அண்மைய தேர்தல் 53% மான பெண்கள் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தியது.[28]

இதன் காரணமாக ஒரு கட்சியின் விபி நிரலில் உள்ள சட்டமாக்கப்பட்ட வேட்பாளர் கோட்டாக்கள் மிக அதிகளவு பிரதிநிதித்துவ முடிவுகளை வெளிப்படுத்தும். இதில், கட்சி பட்டியலில் முதலிரு வேட்பாளர்களும் (ஆண் அல்லது பெண் என்ற) ஒரே பாலைச் சார்ந்தவர்களாக இருக்க முடியாது என்பதை கட்டாயமானதாக்கும் ஆண்,பெண் என்ற இரு பாலாரையும் ஒருவரையடுத்து ஒருவராக மாறி மாறி உள்ளடக்குதல் (Zipper Quota), ஒவ்வொரு

---

[26] Ibid

[27]பேனாவிட்ஸ்,ஜே.(2003). பொலிவியாவில் பெண்களின் அரசியல் பங்களிப்பு: முன்னேற்றங்களும் தடைகளும்(pp.2-3).லீமா:ஜனநாயக மற்றும் தேர்தல் உதவி நிறுவனம்(IDEA).http://www.quotaproject.org/CS/CS_Costa_Bolivia_25-11-2003.pdfஇலிருந்து பெறப்பட்டது

[28]பொலிவியா/ கோட்டா செயற்றிட்டம்: பெண்களிற்கான கோட்டா உலகத்தரவுகள்.(2015).Quotaproject.org.15மார்ச்2016பெறப்பட்டது,http://www.quotaproject.org/uid/countryview.cfm?CountryCode=BO இலிருந்து

ஐந்து பதவிக்கும் 40:60 எனும் விகிதம் மற்றும் மூன்று பேர் கொண்ட ஒவ்வொரு குழுவிலும் ஒருவர் பெண்ணாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை (Dahlerup,2013) ஆகியவை உள்ளடங்கும். ஷிப்பர் கோட்டா முறை ஆசனங்களுள் குறைந்த பட்சம் 45% த்தை பெண்கள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதால், ஒரு சமநிலையான ஆட்சி மன்றத்தை தோற்றுவிப்பதில் இந்த முறையே மிகவும் பயன்மிக்கதாகும்.[29] தற்போது பொலிவியா மற்றும் லெசோதா ஆகிய நாடுகள் இம்முறையை பயன்படுத்துகின்றன.

சட்டரீதியாக குறைவான விகிதாசாரத்துவமிக்க முறைகள் தனியான அடுக்குகள் மூலம் அல்லது பெண்களுக்கென விசேடமாக ஒதுக்கப்பட்ட தொகுதிகள் மூலம் ஓதுக்கப்பட்ட ஆசனங்களைச் சேர்த்துக்கொள்கின்றன. இதில் முதலாவது, ஆசன ஒதுக்கீட்டையும் வாக்களிப்பு நடைமுறையையும் சிக்கலானதாக்கும் பெண்களுக்காக விசேடமாக ஏற்படுத்தப்படும் ஒரு மூன்றாவது அடுக்கினை வேண்டிநிற்கிறது. இரண்டாவது முறைமை பெண் வேட்பாளர்கள் மாத்திரம் போட்டியிடும் ஒரு சில தொகுதிளை ஒதுக்குவதாகும். காலப்போக்கில் ஆண் வேட்பாளர்கள் இல்லாதொழிக்கபடாதிருக்கும் வண்ணம் இந்த மாவட்டங்கள் சுழற்சிமுறையில் மாற்றப்படவேண்டியிருக்கும். இந்த இரண்டு முறைகளும் தேர்தல் முறைமைக்குள் சேர்த்துக்கொள்வதற்கு மிகவும் சிக்கலானவையாகவும் விபி கட்சி நிரல் கோட்டா முறைமையைவிட குறைந்த விகிதாசாரத்துவம் கொண்டதாகவும் உள்ளன.

**உசாத்துணைகள்**

*Advantages and Disadvantages of MMP*. (2016). *Ace Project: The Electoral Knowledge Framework*. Retrieved 14 March 2016, from http://aceproject.org/ace-en/topics/es/esd/esd03/esd03a/esd03a01

Benavides, J. (2003). *Women's Political Participation in Bolivia: Progress and Obstacles* (pp. 2-3). Lima: Institute for Democracy and Electoral Assistance (IDEA). Retrieved from http://www.quotaproject.org/CS/CS_Costa_Bolivia_25-11-2003.pdf

Benoit, K. (2006). Duverger's Law and the Study of Electoral Systems. *French Politics*, *4*, 69-83. Retrieved from http://file:///home/chronos/u-f4a7cf4513c4eddce3c4c13245718250d09a4434/Downloads/Benoit_FrenchPolitics_2006%20(2).pdf

[29] லார்சேர்ட்,எஸ்.,மற்றும் டெப்ஹோர்ன்,ஆர்.(2007).சமநிலைக்காக வடிவமைத்தல்: சிறப்பாக பொருந்தக்கூடிய, இடைநிலையாக பொருந்தக்கூடிய மற்றும் பக்கச்சார்பற்ற தேர்தல் முறைமை மற்றம் பால்நிலை கோட்டா.ஸ்டொக்ஹோல்ம்:சர்வதேச IDEA.http://www.ndi.org/files/Designing-for-Equality-PDF.pdfஇலிருந்து பெறப்பட்டது

*Bolivia | quotaProject: Global Database of Quotas for Women*. (2015). *Quotaproject.org*. Retrieved 15 March 2016, from http://www.quotaproject.org/uid/countryview.cfm?CountryCode=BO

*Bolivia: Electoral Reform in Latin America*. (2016). *Ace Project: The Electoral Knowledge Network*. Retrieved 9 March 2016, from http://aceproject.org/main/english/es/esy_bo.htm

Chandrasekara, G. (2015). Sri Lanka's cabinet approves 20th Amendment with 237 parliamentary seats.*Lanka Business Online*. Retrieved from http://www.lankabusinessonline.com/sri-lankas-cabinet-approves-20th-amendment-with-237-parliamentary-seats/

Dahlerup, D. (2013). *Atlas of electoral gender quotas* (pp. 30-33). Stockholm: International IDEA.

*Djibouti opposition ends election boycott - BBC News*. (2013). *BBC News*. Retrieved 14 March 2016, from http://www.bbc.com/news/world-africa-21554465

*Djibouti: Assemblée nationale, Last elections*. (2013). *Inter-Parliamentary Union Database*. Retrieved 8 March 2016, from http://www.ipu.org/parline-e/reports/2089_E.htm

*Election of Members of the German Bundestag*.(2016). *Deutscher Bundestag*. Retrieved 8 March 2016, from http://www.bundestag.de/htdocs_e/bundestag/elections/electionresults/election_mp/245694

*Electoral reforms in a vacuum | The Sunday Times Sri Lanka*. (2016).*Sundaytimes.lk*. Retrieved 28 March 2016, from http://www.sundaytimes.lk/150322/sunday-times-2/electoral-reforms-in-a-vacuum-140881.html

*European Standards of Electoral Law in Contemporary Constitutionalism*. (2005) (pp. 58-60).

Gilling, A., & Grey, S. (2010). *Representing Women: MMP and Women's Political Representation in New Zealand* (pp. 7-8).Women for MMP. Retrieved from https://campaignformmp.files.wordpress.com/2010/09/representing-women-gilling-and-grey-2010.pdf

Gschwend, T., & Kolk, H. (2006).*Split Ticket Voting in Mixed Member Proportional Systems: The Hypothetical Case of The Netherlands* (pp. 41-42). Acta Politica. Retrieved from http://www2.sowi.uni-

mannheim.de/gschwend/pdf/publications/Gschwend_vanderKolk'06_SplitTicketVoting.pdf

Gschwend, T., Johnston, R., & Pattie, C. (2003). Split-Ticket Patterns in Mixed-Member Proportional Election Systems: Estimates and Analyses of Their Spatial Variation at the German Federal Election, 1998. *British Journal Of Political Science*, *33*, 109-127. http://dx.doi.org/10.1017/S000712340300005

*IFES Election Guide | Elections: Djibouti Parliamentary 2013*. (2016). *Electionguide.org*. Retrieved 16 March 2016, from http://www.electionguide.org/elections/id/1654/

*IFES Election Guide | Elections: National Assembly*. (2015). *Electionguide.org*. Retrieved 8 March 2016, from http://www.electionguide.org/elections/id/2809/

King, C. (2000). *Electoral Systems*. Washington D.C.: Georgetown University.

*Lady Members*. (2015). *Parliament of Sri Lanka*. Retrieved 9 March 2016, from https://www.parliament.lk/lady-members

Larserud, S., & Taphorn, R. (2007).*Designing for Equality: Best-fit, medium-fit and non-favourable combinations of electoral systems and gender quotas*. Stockholm: International IDEA. Retrieved from https://www.ndi.org/files/Designing-for-Equality-PDF.pdf

Lijphart, A., & Aitkin, D. (1994).*Electoral systems and party systems*. Oxford: Oxford University Press.

*Māori Representation*.(2014). *Electoral Commission*. Retrieved 8 March 2016, from http://www.elections.org.nz/voting-system/maori-representation

*MMP Voting System*.(2014). *Electoral Commission*. Retrieved 8 March 2016, from http://www.elections.org.nz/voting-system/mmp-voting-system

Moser, R., & Scheiner, E. (2004). Mixed electoral systems and electoral system effects: controlled comparison and crossnational analysis. *Electoral Studies: An International Journal*, *23*(4), 580-581. Retrieved from http://www.utexas.edu/cola/government/_files/moser-web/Moser_and_Scheiner_Mixed_Electoral_Systems_and_Electoral_System_Effects_ES_2004.pdf

New Democratic Front,. (2015). *Maithri: A Stable Government*. *priu.gov.lk*. Retrieved 15 March 2016, from http://www.priu.gov.lk/presidential_manifestos/Manifesto-EN.pdf

One Text Initiative Research,. (2013). *Representative Democracy & Electoral Reforms in Sri Lanka* (pp. 10-12). Colombo: OTI. Retrieved from http://www.onetext.org/wp-content/uploads/2013/03/04_July-2011.pdf

*Open, Closed and Free Lists*. (2016). *Ace Project: The Electoral Knowledge Network*. Retrieved 7 March 2016, from http://aceproject.org/ace-en/topics/es/esd/esd02/esd02e/esd02e03

*Overhangs*. (2012). *MMP Review: Have Your Say and Participate*. Retrieved 7 March 2016, from http://www.elections.org.nz/sites/default/files/bulk-upload/documents/Overhangs_submissions.pdf

*Parliament of Sri Lanka - The Electoral System*.(2012). *Parliament.lk*. Retrieved 15 March 2016, from http://www.parliament.lk/members-of-parliament/the-system-of-elections-in-sri-lanka/the-electoral-system

Prime Minister and Minister of Policy Planning, Economic Affairs, Child , Youth and Cultural Affairs,. (2015).*The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka: Twentieth Amendment to the Constitution*. Colombo: Department of Government Printing.

*Sainte-Laguë Allocation Formula*. (2016). *Elections: Electoral Commission*. Retrieved 14 March 2016, from http://www.elections.org.nz/voting-system/mmp-voting-system/sainte-lagu%C3%AB-allocation-formula

Shaheid, F., & Jayakody, R. (2015).Systems and the 20th Amendment.*Ceylon Today*, pp. https://www.ceylontoday.lk/51-93192-news-detail-systems-and-the-20-a.html.

Siaroff, A. (2013). *Comparing Political Regimes: A Thematic Introduction to Comparative Politics* (3rd ed., pp. 109-191).University of Toronto Press.

*Sri Lanka*. (2015). *Quota Project: Global Database of Quotas for Women*. Retrieved 9 March 2016, from http://www.quotaproject.org/uid/countryview.cfm?CountryCode=LK

The Daily Mirror,.(2015). Urgent Amendment Needed. Retrieved from http://www.dailymirror.lk/84453/urgent-amendment-needed

*The D'Hondt system: How MEPs get elected in Britain - BBC News*. (2014). *BBC News*. Retrieved 7 March 2016, from http://www.bbc.com/news/uk-politics-27187434

*The Electoral System*.(2012). *Parliament of Sri Lanka*. Retrieved 14 March 2016, from http://www.parliament.lk/members-of-parliament/the-system-of-elections-in-sri-lanka/the-electoral-system

*The MMP Electoral System Faces Political Challenges in Lesotho* —. (2016). *Aceproject.org*. Retrieved 15 March 2016, from http://aceproject.org/today/feature-articles/the-mmp-electoral-system-faces-political-challenges-in-lesotho

*The Voting System*.(2016). *Europarl.org.uk*. Retrieved 14 March 2016, from http://www.europarl.org.uk/en/your-meps/european_elections/the_voting_system.html

United Nations Development Programme. (2014) (p. 7). New York. Retrieved from http://www.undp.org/content/dam/undp/library/Democratic%20Governance/Electoral%20Systems%20and%20Processes/2122-UNDP-GE-bolivia.pdf

Vollan, K. (2015). *Options for a Mixed Member Proportional System for the Parliament of Sri Lanka*.Presentation, Colombo.